தனிப்பிரதி 1 அணா ஆண்டு சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455.

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்:
C. N. அண்ணாதுரை M. A.,

"வாயிலில் வறியரை வளர்த்திடல் அன்போ?
மடத்தில் வீணிற் பொருளைக் கொடுத்திடல் அன்போ?"
[கவி பாரதி தாசன்]

மலர் 1. | காஞ்சிபுரம் 30—8—42 சித்திரபானு—ஆவணி 14—ஞாயிறு | இதழ் 26

# சூரியக்குட்டியைத் தேடிய மாப்பிள்ளை!

பரதன்

மாடு இல்லா வண்டி
மானத்திலே போவுதாம்!

மனுஷன் போலேப் பாடுதாம்
மைதானத்திலே ஒரு கம்பி!

எண்ணெ இல்லே திரியுமில்லே,
எரியுதாம் விளக்கு!

என்னென்னமோ இருக்குதாம்
என் மாமன்வாழும் சீமையிலே!

—என்று பட்டிக்காட்டு பரந்தாமன் கூறினான். அவன் மாமன் வாழும் சீமை சென்னை, மாடு இல்லாமல் மானத்திலே போவது விமானம், மற்றொன்று ரேடியோ, எண்ணெயில்லா விளக்கு எலக்ட்ரிக்! ஆனால் விஷயந் தெரியாதவனுக்கு இவைகள், விந்தையாகத் தோன்றின பாவம்! சென்னை சென்று சுற்றிப்பார்த்ததிலே புதியதோர் உலகமே கண்டான். கிராமத்துக்குத் திரும்பிவந்த பிறகு, அவன் கண்ட காட்சிகளைப் பற்றிச் சொல்லிச் சொல்லி, கேட்பவர் காதுகளைக் கூடச் சலிக்கச்செய்து விட்டான். அதைப்போலவே, காங்கிரஸ் தோழர்கள், சுயராஜ்யம் என்பது பற்றி, விந்தையானது என்று கருதி, அதைக்காண வேண்டுமென்று, நாடுபல போகாவிடினும், ஏடுபல படித்து, என்னென்ன அழகு அந்த சுயராஜ்யத்திலே இருக்கிறது தெரியுமோ என்று மகிழ்ந்து, மற்றையோரிடம் சுயராஜ்யம் மட்டும் கிடைத்து விடட்டும், பாருங்கள், நமக்கு இருக்கும் எல்லாக் கஷ்டமும், பஞ்சாய்ப்பறக்குது என்று பேசினர். பட்டினத்திலே பல கண்ட பட்டிக்காட்டுத் தோழர்களுக்கும், வெறும் படிப்பிலே சுயராஜ்யத்தைப் பற்றிப் பலப்பல தெரிந்து கொண்டு, சுயராஜ்யம் என்றால் எப்படி இருக்கும் என்பதைத் தெரிந்து கொண்டவர்களுக்கும் அதிக வித்தியாசமில்லை. இதாவது பரவாயில்லை. மற்றொரு வகை உண்டு, அதுதான் மிக ஆபத்தான ரகம்.

மற்றோர் ரகத்தைச் சேர்ந்த ஒரு மாப்பிள்ளை, மாமியார்வீடு போனானாம். ஓலைக் குடிசை அது. அதிலே, மினுக்கென எறிந்துக் கொண்டிருந்ததாம், டப்பா விளக்கு! அதுவே விந்தையாக இருந்தது மாப்பிள்ளைக்கு! அவன் காலையிலே சூரியனையும், இரவிலே சந்திரனையும் கண்டவனே யன்றி, இந்த விளக்கையுங் கண்டவனல்ல, எனவே தன் மைத்துனனைக் கேட்டானாம், மிக்க ஆச்சரியத்துடன், "ஏ! முருகா இதென்னடா இது" என்று. அவன் ஒரு குறும்புக்காரன். மாப்பிள்ளையின் மடத்தனத்தைப் போக்காமல், கேலிக்குக் கூறினான், இது சூரியக்குட்டி! என்று. சூரியன் ஒளிதருவதுபோல், இதுவும் வெளிச்சம் தருகிறது, எனவே இது சூரியனின் குட்டிதான் என்று மாப்பிள்ளை நம்பினான். அத்தோடு நின்றானா, இல்லை. இதை எப்படியாவது நமது வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகவேண்டும் என்று தீர்மானித்து விட்டான். நடுநிசியில் எழுந்தான். சூரியக்குட்டியை எங்காவது எடுத்து ஒளித்து வைத்துவிட்டால் ஊருக்குப் போகும்போது யாரும் அறியாதபடி எடுத்துக் கொண்டு போய்விடலாம் என்று எண்ணினான். விளக்கை எடுத்தான் சந்தடி செய்யாமல், கூறையிலே ஒரு ஒதுக்கமான இடத்திலேவைத்துவிட்டு, "இனி சூரியக் குட்டி நமக்குத்தான் சொந்தம்" என்று மனதிலே எண்ணிக்கொண்டு படுத்தான் குறட்டைவிட்டான்.

"ஐய்யோ! ஐய்யோ! குடிசையிலே நெருப்புப் பிடித்துக் கொண்டதே" என்ற கூக்குரல் கேட்டது மாப்பிள்ளைக்கு. கண்ணைத் திறந்தான், குடிசை பற்றி எறியவும், மாமனும் மாமியும், மைத்துனனும் மனைவியும், அலறி அழுதுகொண்டே நெருப்பை அணைக்க முயல்வதையுங் கண்டான். துடித்துஎழுந்தான். எழுந்தவன் நீர்க்குடத்தைத் தேடவில்லை, கீழேகிடக்கும் சாமான்களை எல்லாம் புரட்டிப் புரட்டி சூரியக் குட்டியைத் தேடினான். "அடபாவி! என்னடா தேடுகிறாய், இந்த வேளையிலே" என்று மைத்துனன் கேட்க மாப்பிள்ளை "இருமச்சான்! எரவாணத்திலே சூரியக் குட்டியை ஒளிச்சிவைச்சேன், அதைக் காணோம் தேடுகிறேன்" என்றுரைத்தான். விஷயம் அப்போதுதான் விளங்கிற்று. குடிசைக்கு நெருப்பிட்டது, இந்த மடையனின் கோணல் சேட்டைதான் என்பது. சூரியக்

நட்டி என்று விளக்கை எண்ணிக்கொண்டு, அதை ஒளித்துவைக்க, வீடேவெந்து சாம்பலாயிற்று அந்த விவேகமற்றவனால். அதுபோல சிலதோழர்கள் புரட்சி என்ற பதத்தைப் பற்றி படித்ததை ஜீரணித்துக் கொள்ள முடியாமல், சூரியக்குட்டியை ஒளித்துவைத்தவன் கதைபோல, இன்று நடக்கும் கலவரம் குழப்பம், கொடுமைகளை, புரட்சி என்று எண்ணுகிறார்கள். பட்டிக் காட்டான், சூரியக் குட்டியை மறைத்து, குடிசையை நாசம் செய்ததுபோல, புரட்சி என்பது பற்றிய பக்குவக் கருத்தை உணராதார் இன்று நடத்தும் செயல்கள் நாட்டை நாசமாக்குகின்றன.

நண்பரொருவர் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார் நேற்று. "எது எப்படியானாலும், இந்த நெருக்கடியான நேரத்திலே இவ்வளவும் நடப்பது புரட்சியின் அறிகுறிதானே! இந்தச் சமயத்திலேதான் புரட்சி வெற்றிகரமாக நடக்கும் என்று லெனின் முதலியவர்கள் சொன்னார்களாமே. கடந்த ஜெர்மன் சண்டை நடந்துகொண்டிருந்த சமயத்தில்தானே ரஷியாவிலே மாபெரும் புரட்சி உண்டாயிற்று, வெற்றியுங் கண்டனர். அதுபோலத்தானே இங்கு நடக்கிறது இப்போது" என்று என்னைக் கேட்டார். நான் புரட்சியிலே வெறுப்புக்கொண்டவனல்ல என்பது நண்பருக்குத் தெரியும். உண்மையிலே, பல இளைஞர்கள், இன்று நடைபெறுவதை, புரட்சி என்றும், காலமறிந்து செய்யப்படும் காரியமென்றும் கருதுகிறார்கள். இது சூரியக்குட்டியை ஒளித்துவைத்த கதை போன்றதென்பதை அவர்கள் அறியார்கள்.

புரட்சி, சமுதாய, அரசியல், பொருளியல், மத இயல், ஆகிய எந்தத்துறையிலேனும், அன்றி எல்லாத்துறைகளிலேனும், உள்ள குறைபாடுகளைப் போக்க, கோணலை நிமிர்த்த, குறைகளைக்களைய, ஆணவத்தை அழிக்க, அக்ரமத்தை ஒழிக்க, அநீதியை வீழ்த்த, ஆபாசத்தைப் போக்க, செய்யப்படும், துடிப்பான, விறுவிறுப்பான, கஷ்டநஷ்டத்தைப் பற்றிக் கவலைகொள்ளாமல், நடத்தப்படும் செயல்! அதனுடைய நோக்கம், முற்போக்கான முறையை அமைக்க வேண்டும் என்று இருந்தால் மட்டுமே, அதனை வரவேற்கத்தக்க புரட்சி என்று அறிவாளிகள் கொள்வர். இருக்கும் இன்னலைத்துடைத்து இதத்தை உண்டாக்கும் முயற்சியாக இருக்கவேண்டும் அந்தப்புரட்சி! ரஷியாவிலே, முதலாளித்துவத்தின் மோசமான முறைகளை முறியடித்து, பாட்டாளிகளின் இன்பத்தைநிலை நாட்ட, புரட்சிநடந்தது. அதை உலக அறிவாளிகள், பயங்கரமானது, ஆனால் நல்ல நோக்கத்துக்காகச் செய்யப்பட்டது என்று கூறினர். அதிலே ஈடுபட்ட மக்களும், என்ன நடக்கும், என்னவிளையும், எத்தனை உயிர்போகும் என்பதனைப்பற்றிய கவலையை விட்டனர். அதனை வீரம், தியாகம், என்று விவேகிகள் கூறினர். உள்ளபடியே, "என்னென்ன நடக்குமோ? எவ்வளவு உயிர்ச்சேதமாகுமோ? என்று அந்தக்காலத்திலே ரஷிய மக்கள் நினைக்கத் தொடங்கி இருந்தால், உலகின் ஒருபாகம், உல்லாசபுரியாகியிருக்க முடியாது. நல்லதோர் நோக்கத்தைக்கொண்டு நடத்தப்படும் முயற்சியிலே, இடுக்கண் குறுக்கிடின், வீரர் மதிப்பதில்லை, மருள்வதில்லை, மண்டியிடுவதுமில்லை. இந்த மாண்பு அவ்வப்போது உலகிலே ஒருசிலரிடமாவது இருந்ததால் மட்டுமே, இந்த அளவு முற்போக்காவது மக்கள்பெறமுடிந்தது. சிலுவையிலே அறைந்த காலை, சிந்திய இரத்தம் எத்தனை அவுன்சுஇருக்குமோ என்றுஏசுநாதர் கவலைப்பட்டு சித்தஞ்சோர்ந்திருந்தால், கிருஸ்தவ மார்க்கம் பரவியிருந்திருக்க முடியுமா? ஒரு மார்க்கமாக இருந்திருக்கமுடியுமா! தன்மீது வீசப்பட்டகற்களின்கனம் எவ்வளவு, அதனால் உண்டாகும் வலிஎவ்வளவுஎன்பதை முகமது மெக்கா—மெதினா பாதையிலே நின்று யோசித்திருந்திருப்பாரானால், ஏகதெய்வ வணக்கமும், எல்லோரும் சமமே என்ற கோட்பாடும் கொண்ட சத்திய இஸ்லாம் மார்க்கம் செழித்திருக்கமுடியுமா! அரண்மனையை விட்டு வெளியேறப்போகிறோமே, காடு மேடு சுற்றினால் கால்கடுக்காதோ, கள்ளியும் முள்ளும் தைக்காதோ என்று எண்ணி சித்தார்த்தர் கவலைப்பட்டிருந்தால், புத்தராகி இருக்கமுடியாது! கஷ்ட நஷ்டம் எனும் கவலை, கடமையைச் செய்வோருக்குப் பிறக்கக் காரணமில்லை, பிறந்திடின் அவர்கள் செயலாற்றும் வகையறியார்!

புரட்சி நடத்தியவர்கள், பட்ட கஷ்ட நஷ்டம் கொஞ்சமல்ல. ஆனால் அவர்கள் புண்பட்ட மனம் கொண்டும், புன்னகைபுரியும் முகத்தோராகவே விளங்கினர். காரணம், கடமையைச் செய்கிறோம் என்ற களிப்பு, செய்யும் காரியம், மக்களின் இன்பத்தைத் தருவது என்ற நம்பிக்கை. அத்தகைய புரட்சியிலே, சிந்தும் இரத்தம், வீரர்கள் குளித்திடும் நீர்என்பேன் நான்! அங்கு உருளும் தலைகள், மற்றையோர் தலை வணங்கும் தன்மையுடையவர்களின் சிரங்கள் என்பேன். லெனின் புரட்சி நடத்தினார்! ஆம்! கடந்த ஜெர்மன் சண்டையின்போதுதான்! ஆனால், நோக்கம் என்ன? சமதர்மம்! யாருக்கு எதிரிடையாக நடந்தது புரட்சி? பல்கேரியரை எதிர்த்தா, பால்கனை எதிர்த்தா, கிரீசை எதிர்த்தா? இல்லை! ரஷியாவிலே இருந்த ஒரு ரஷிய சர்க்காரை—ஜார் ஆட்சியை எதிர்த்து, ஆட்சி முறையை எதிர்த்து புரட்சிநடத்தினர். ரஷிய மக்கள், ரஷிய சர்க்காரின் முறை மாறவேண்டுமென்பதற்காக ரஷியாவிலே ஒரு புரட்சி செய்தனர்! கவனிக்கவேண்டும் தோழர்கள், வெளிநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்தல்ல, வெளிநாட்டார் ஆள்வதினின்றும் விடுதலைபெற அல்ல. ரஷிய சுயராஜ்யத்திலே மக்கள் பட்ட கஷ்டத்திலிருந்து ரஷிய மக்களை விடுவிக்கவே புரட்சி நடந்தது. ரஷியா, வேறுநாட்டினால் ஆளப்பட்டு, சுயராஜ்யம் பெறுவதற்காக நடத்தப்பட்டதல்ல அந்தப்புரட்சி. ரஷியா சுதந்தர நாடாக இருந்தது, ரஷிய ஜார் ஆண்டுவந்தார், சுயராஜ்யம், சுகராஜ்யமாக இல்லை எனவே, உலகு கொந்தளித்துக்கொண்டிருந்த அந்தவேளையிலே, ஜெர்மன் சண்டைநடக்கும் நேரத்திலே, ரஷிய வீரர்கள், இதுவே தக்கசமயம் சுகராஜ்யம் அமைக்க என்று துணிந்தனர், தூளாயிற்று ஆணவக்கோட்டை, புது உலகம் பூத்தது! இருக்கும் அரசைவிட சிலாக்கியமான இன்னோர் அரசை ஏற்படுத்த புரட்சி நடத்தப்படுமானால் அது அறிவாளிகளுக்கு உடன்பாடான செயலாகக்கொள்ளப்படும். முசோலினி இத்தாலியிலே ஒரு புரட்சி நடத்தினார்—எதற்கு? தன் ஆதிக்கத்தை நிறுவ! ஹிட்லரும் ஒரு புரட்சி நடத்தித்தான் பட்டத்துக்கு வந்தார். ஸ்பெயினிலே பிராங்கோவும் அவ்வண்ணமே செய்தார். இவைகளும் புரட்சிகளே, ஆனால் நோக்கம் தீயது, விளைவு வேதனை தருவது என்பதுபற்றி, அவர்கள் நடத்திய புரட்சிகளை ப்புல்லர்களின் வெறியாடல் என்று நல்லோர் எள்ளி நகையாடுவர்! விளக்கைச் சூரியக்குட்டி என்று நம்பினவன் போல், எந்த வெறிச் செயலையும் புரட்சி என எண்ணுபவர், பாலும் கள்ளும் வெண்மைதான் எனவே இரண்டும் ஒன்றே என்று கொண்டு பருகிடும் நிலையிலுள்ளோர் என்பேன். இன்று இங்கு நடைபெறும் செயல்கள், சுயராஜ்யக் கிளர்ச்சியுமல்ல, சுகராஜ்யக் கிளர்ச்சியுமாகாது. புரட்சி என்ற பதத்தை இதற்கிடல் ஒரு போதும் பொருந்காது.

* * * *

வெள்ளையர் ஆட்சியிலே இன்று இருக்கிறோம். விருப்பத்துடன் அல்ல! வேறோர் வல்லரசு, வெள்ளையரை விரட்டிவிட்டு, "இந்தியாவை" வெள்ளாட்டியாக்கிக்கொள்ளத் துடிக்கிறது. வருகிற அந்த எதிரியை விரட்டும் படைபலம் நமக்கில்லை. நாற்பது கோடிமக்களாம் இங்குள்ளோர்! இதில், களம் புகும் பக்குவ

9ம் பக்கம் பார்க்க.

# டான் வெளியிலே வீர வெள்ளம்!

## காலமறிந்தோர் கடமை என்ன?

### சேர்மன் ராமானுஜ முதலியார் சொற்பொழிவு.

நமது இயக்கப் பிரமுகரும், திருவாரூர் நகர சபைத் தலைவருமான உயர்திரு. ராமானுஜமுதலியார் சின்னாட்களுக்கு முன்பு தேசிய முன்னணிக் கூட்டத்தில் தலைமை தாங்கி ஆற்றிய சொற்பொழிவு இங்கு தரப்பட்டிருக்கிறது.

*        *        *        *

உலகப் போக்கு உன்னதமாகப் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. ஊர்படும்பாடு உருக்கமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. நாட்டுப் பற்றுள்ளோரின் கடமை தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

*        *        *        *

தேசிய யுத்த முன்னணி, ஒரு கூட்டு முயற்சி, தற்காப்பு முறை, எதிரிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற ஒரு கேடயம் என்பது விளக்கப்பட்டிருக்கிறது.

*        *        *        *

இதனை ஆயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரமாகத் தஞ்சை ஜில்லா தேசிய யுத்த முன்னணியினர் வெளியிடவேண்டுமென அவாவுருகிறோம்.

*        *        *        *

### தேசீய முன்னணி!

நாட்டுப்பற்று நிறைந்த பெரியோர்களே! அன்பர்களே! நாம் முதல் முதலில் இது அமைதியான காலமா என்பதை ஆராயவேண்டும். தினந்தோறும் மாறுதல், இடந்தோறும் மாறுதல், அதிர்ச்சி, திடுக்கிடும் நிகழ்ச்சிகள். இதற்கிடையிலே மன உறுதியை, ஒத்துழைப்பை வேண்டி கூடியிருக்கிறோம். மக்கள் இயற்கையில் மனக்கசப்பால் உறுதியும் தளறலாமல்லவா? அதனை நீக்க ஒற்றுமை நிலவ, எதிரிகளுக்கு நாட்டில் இடம் கொடுக்காதிருக்க மேன்மை தங்கிய வைசிராய் பிரபு அவர்கள் தேசிய முன்னணி இயக்கம் என்ற ஒன்றை தொடங்கி வைத்தார்கள். இது நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. எல்லாச் சமூகங்களும், எல்லா அரசியல் கட்சிகளும் நாடென்ற ஒரே நோக்கத்துடன் இன்று உழைக்கும் ஒரு இயக்கம் உண்டென்றால் அது இந்த முன்னணி இயக்கமே யாகும். இவ்வியக்கத்தில் உள்ளன்புடன் கலந்துகொள்ள ஒரு தனிமனிதன் கூசுவானானால் அது அம்மனிதனுடைய பிற்போக்கான தன்மையையும், காட்டிக்கொடுக்கும் பயங்கொள்ளித் தனத்தையும் காட்டுவதாகும். அன்றியும் தன் கடமையில் தவறியவனுமாவான். உலகம் என்ன நிலையில் இருக்கிறது என்பதைச்சற்று சிந்தியுங்கள். இன்று சமதர்ம உணர்ச்சி பொங்கி வழிகிற ஜனநாயக ஆட்சி உருப்படியான முறையில் குடிகொண்டுள்ள ஏற்றத் தாழ்வற்ற ரஷ்யா தேசத்தில் டான் ஆற்றங்கரையில் இரு புறங்களிலும் செஞ்சட்டை தாங்கிய பொதுவுடமை போர்வீரர்கள், தங்கள் நாட்டின் விடுதலைக்காக நாஜீ அரக்கன்உயிர் கொலைப்பதற்காகத் தங்கள் இரத்தத்தை ஓட விடுகிறார்கள். உயிரைத் தியாகம்செய்கிறார்கள். வீரவெள்ளம் 1500 மைல் பரந்து பாய்கிறது. பூமிமுழுவதும் செவ்விரத்தம் ஓடுகிறது. ஐரோப்பா முழுவதுமே நாஜிகளின் நேர்மையற்ற செயல்களால் திணறிக்கொண்டிருக்கிறது. ஏன்? நாஜிகளின் மாயவலையில் சிக்கிய பிரான்ஸ் தேசமும், நாஜிகளின் பலிபீடத்தில் முதலாவதாக தன் ஜனநாயகத்தை பலிகொடுத்து இரண்டாவதாக தன் கப்பல்களை, திரண்டபடை பலத்தையும் பலிகொடுத்தது. உணவுப் பொருள்கள் எல்லாவற்றையும் பறிகொடுத்தது. கைத்தொழில் சாமான்கள் அனைத்தையும் ஜனநாயகத்தை அழிப்பதற்கு, மூக்கறுபட்டவன் மோட்சம் காட்டிய கதைபோல, பிற சுதந்திர நாடுகளை அடிமைப்படுத்த உதவுகிறது, இவ்வளவு செய்தும் நாஜிகளின் அருள் கிடைக்கப்பாடு இல்லாமல் தினந்தினம் தன் உழைப்பை, தொழிலாளர்கள் இரத்தத்தைக் கொடுத்துக் கொண்டே வருகிறது. அதனால் பிரான்ஸ் பெற்ற பலன் என்ன? தன் மானம் இழந்தது ஒன்றுதான். அன்பர்களே இனி எகிப்திய போர்முனையை பாருங்கள். அங்கு நாஜிகளின் முதல் துணையான கொள்ளிவாய்பேய் இட்டாலியும் சேர்ந்துகொண்டது. இரண்டுமாக எகிப்தில் மின்னல் தாக்குதல் போர்முறைகளை கையாள்கின்றன. ஆனால் அங்கு இவை இரண்டின் பெருமிதங்களும் பயன்படவில்லை. நமது நேசதேசங்களின் படைத்தலைவர் ஆக்கின்லெக் அணைபோட்டு எதிரிப்படைகள் முன் ஏறாதபடி தடுத்துவிட்டார். அந்த வெற்றி எகிப்துக்கு மட்டுமின்றி இந்தியாவுக்கு மாகும். ஆஸ்திரேலியாவில் வடக்குக்கரையிலும், பக்கத்துத் தீவுகளிலும் நயவஞ்சகக் குள்ளர்களான ஜப்பானியர்கள் தாக்கி வருகின்றார்கள். ஆஸ்திரேலியர்களின் மன உறுதியை, அஞ்சாது எதிர்த்துத் தாக்கும் ஆற்றலைக் கவனியுங்கள். நமக்கு சமீபத்திலேயே சீனர்களின் போர்முறை எல்லாவற்றையும்விட மிஞ்சி இருக்கிறது என்னலாம். ஐந்து ஆண்டுகளாக நாடு இழந்தும் நகர் இழந்தும், மக்களை இழந்தும், மன உறுதி தளராது போரிட்டு வருகிறார்கள். நமது நாட்டிலே இலங்கையிலும், காக்கிநாடா, விசாகப்பட்டணம் ஆகிய இடங்களில் குள்ளர்கள் பதம்பார்த்தார்கள், வெருண்டுபயன்பொறாதென்று ஓடிவிட்டார்கள். சிலநாட்களுக்குமுன் வங்காளக்குடாக் கடலில் ஜப்பானிய ஸீப்ளேயிங் போட்டுகள் சுடப்பட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

### உலகப்போர் தருவது என்ன?

ஒவ்வொருவர் வயிற்றிலும் அடிக்கிறது. உணவுப் பொருள்கள் உற்பத்திக்குறைவாலும், போக்குவரவு சாதனக் குறைவாலும், பொருள்களின் விலை விஷம்போல் ஏறிக்கொண்டே வருகிறது. இன்றியமையாத சாமான்கள் கிடைக்காமல் நாம் படும் கஷ்டம் அளவிட்டு கூறத்தான் முடியுமா? எதையும் நிறுத்திக் கொள்ளலாம். நோய்க்கு மருந்து வேண்டுமானால் என்ன செய்வது? எதிரிகள்வசமான நாடுகளிலிருந்து வாழ்நாளுக்கென்று வைத்திருந்த பொருளை இழந்து, பூமியை இழந்து, வரும்வழியில் ஒவ்வொருவராக உயிரையும் கொடுத்துக்கொண்டே தாய்நாட்டை நோக்கி வந்துள்ள இந்தியர்களில் பெரும்பாலான தமிழர்களின் நிலைமையை நினைத்தால் மனம்கூசாதா. பர்மா முதலிய பக்கத்து நாடுகளிலிருந்து எண்ணை, அரிசி முதலிய இன்றியமையாத பொருள்கள் வராததன்மை ஒரு பக்கம் விளக்கணைப்பால் ஏற்படும் துன்பங்கள் ஒரு பக்கம் இப்படி எல்லா பக்கங்களிலும் துன்பங்கள் சூழ்ந்திருக்கும்போது அவற்றைத்தொலைக்க வழி தேடாமல் உள்நாட்டுக்கிளர்ச்சியை உண்டாக்குவது அழகாகுமா? நாம் பிடித்திருக்கும் உறுதி என்னும் கயிற்றை ஒத்துழையாமை என்ற எலி அறுக்கவிட்டு

விடாதீர்கள். நம் நோக்கம் நாடு அடிமைப்படக் கூடாதென்பதுதான். அதிலும் அநீதிக்காரர்களுக்கு அடிமைபடக்கூடாது என்பதுதான். அதிலும் கொலைசெய்யும் குள்ளர்களுக்கு அடிமைப் படக்கூடாது என்பதுதான் அடிமை வெறுக்கும் அறிவாளிகளே! அடிமைவேண்டாத ஆண்மக்களே! முன்னணி படையில் சேருங்கள். பொருள் தியாகமும், இன்பத்தியாகமும் செய்ய முன் வாருங்கள். உடல் வன்மையும், உள்ளஉறுதியும் பெற்ற இளஞ்சிங்கங்களே! வீரம் உங்கள் குடிப்பிறப்பல்லவா? மானம் உயிரைக்காட்டிலும் சிறந்தது அல்லவா? போர் முரசு கொட்டுகின்றதே பழய புகழை நிலை நிறுத்துங்கள். கோழைத்தனம் குடியைக்கெடுக்கும். தேசிய முன்னணியைப் பலப்படுத்துங்கள்.

## தேசிய முன்னணியில் நம் கடமைகள்.

நாம்இன்று பலருக்குப் பகுத்துக்கொடுத்துண்ண வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒருவன் தேவை இருவருக்கு மூவருக்கு ஆகவேண்டிய காலம். மற்ற நாடுகளின் நிலைமையைப் பாருங்கள். பொருள் களஞ்சியமான அமெரிக்காவில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தன் வீட்டு விருந்தொன்றில் சர்க்கரை இல்லாமல் நடத்தினார் என்றால் சர்க்கரை கிடைக்காமல் அல்ல. கோடிக்கணக்கான டாலர்களை போர்ச்செலவுக்குக்கொடுக்கும் அமெரிக்கா அவர் வீட்டில் விருந்துக்கா சர்க்கரை கிடைக்காது? இதிலிருந்து ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தேவையை மூன்றில் ஒரு பங்காகவோ நான்கில் ஒரு பங்காகவோ குறைத்துக்கொள்ளக்கடமைப் பட்டவனாகிறான். ஆதலால் எண்ணெயில்லை, மருந்தில்லை, சர்க்கரையில்லை, என்று அரசாங்கத்தைத்தூற்றும் மனப்பான்மையை அகற்றுங்கள். சிறந்த மறக்கமுடியாத கடமை ஒன்று உள்ளது. அதுதான் காற்றின் வாக்கில் வரும் செய்திகளை தானும் நம்பாமல், பிறர்க்கும் பரப்பாமல் இருத்தல். மரத்தைக்கெடுக்கும் புல்லுருவிகள் போல சமூகத்தைக் கெடுக்கும் ஐந்தாம்படை ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டும். ஐந்தாம்படை இயக்கம் பலவேஷம் கொண்டு காட்சியளிக்கலாம். ஒரு பக்கம் சுதந்திர சட்டை போட்டு தோன்றும், ஒரு பக்கம் அரசியல் குறைபாடு என்ற அவலமான அரிதாரம் பூசிக்கொண்டு தோன்றும், ஆசியா நாடு ஆசியாக்காரருக்கே என்ற வேடமிட்டு வரும். எப்படி வந்தாலும் இது நம்மை ஏமாற்ற வந்தது என்று எண்ணி உதறித்தள்ளி உறுதிகொள்வது உங்கள் கடமை. வானத்தில் விமானம் பறந்தவுடன் அஞ்சி உள்நாட்டுக்குப் போக ஓட்டம் பிடிப்பது எதிரிக்கு இடம்விட்டு வந்ததுபோல் ஆகும். தன் ஊருக்கு யானை, வெளியூருக்குப் பூனை என்ற பழமொழியை மறந்து விட்டீர்களா? நீங்கள் ஒன்றுசேர்ந்து ஒருஇடத்தில் குவிவது எவ்வளவு துன்பத்திற்கு இடம் ஆகுமென்பதைச் சிந்தியுங்கள். ஆதலால் வானமே இடிந்துவிழுந்தாலும் அஞ்சாமல் சொந்த ஊரிலேயே பாதுகாப்பாக இருப்பது எவ்வளவு நல்லது. ஏ. ஆர். பி. அதிகாரிகளின் சட்ட திட்டங்களை மேல்கொண்டு நடப்பது தற்காப்புக்குச் சிறந்தமுறை என்பதைக் கவனியுங்கள்.

இப்படி நாட்டுக்கு நன்மை தேடவேண்டிய உழைக்கவேண்டிய, உயிரைக்கொடுக்க வேண்டிய இக்காலத்தில் ஒரு புரட்சி இயக்கத்தை நடத்த ஒரு பெரிய அரசியல் கட்சி முன் வருமானால் அது எவ்வளவு எதிரிக்கு இடங்கொடுத்த தன்மையாகும். தற்கால நிலையில் ஒரு அரசியல் மாறி மற்றொன்று வருவது என்ன, சட்டை மாற்றுவது போலா? அல்லது ஒரு ஜில்லா கலெக்டர் மாற்றப்பட்டு வேறு ஒருவர் வந்து பதவி ஏற்பது போலவா? எத்தனை துன்பங்கள்! மாறுதல் காலங்களில் நினைக்கமுடியாத அராஜரீக துன்பங்கள் நிகழ்ந்தே தீரும். அது இப்பொழுதுள்ள எண்ணை இல்லாத்துன்பம், சாமான் இல்லாத் துன்பங்களைக் காட்டிலும் பெரிதாகவல்லவா இருக்கும். இந்த மோசமான நிலைமை வருவிக்க மாணவர்கள் முன் வரவேண்டுமாம். ஒவ்வொரு மக்களுடைய உழைப்பும், உள்ளமும் உறுதியும் ஒரு இடத்தில் நிலைத்திருக்க வேண்டியிருக்க, சட்டமறுப்பென்று காட்டிக்கொடுக்கும் வழியில் இட்டுச்செல்ல முயற்சிப்பது அறவே பொருத்தமற்ற செயல் அல்லவா. தலைவர் கடமை சமயம் தெரிந்து நடத்துவது அல்லவா? நமது காந்தியார் சொல், வீடுபற்றி எரியும்பொழுது சுருட்டுக்கு நெருப்பு கேட்பதைபோல் அல்லவா இருக்கிறது. ஆயுதம் தாங்கி அனைவரையும் கொல்லும் ஜப்பான், ஜெர்மன் நாடுகளுக்கு அகிம்சை எப்படி அடக்கும் வன்மைபெறும். வயிரத்தை வயிரம் கொண்டு அறுக்கவேண்டும் என்ற அகத்தியர் சூத்திரம் படித்த தமிழ் நாட்டவர்களே! படை பலத்தை படைகள் கொண்டே வெல்ல வேண்டும் என்பதை எப்படி நீங்கள் மறப்பீர்கள். அகிம்சை என்ற சண்டித்தனம் ஆயுத பலத்தை அழிக்காது, என்பதை நினையுங்கள்.

தொழிலாளிகளே! உங்கள் உழைப்பு எல்லோருக்கும் உணவு அளிக்க நிற்கிறது, உடையளிக்க நிற்கிறது, உயிரைக்காக்கும் வீரர்களுக்கு ஆயுதங்களை செய்துகொடுக்கிறது. அத்தகைய உழைப்பை எந்த மகாத்மா, எந்த சின்னாத்மா, எந்த வடநாட்டார், கேட்டாலும், வேறு எந்த துறையிலும் இழக்க முன் வராதீர்கள்.

மாணவர்களே! நீங்கள் சருகரிக்கும் தொழிலில் இருக்கிறீர்கள். உங்களைக் குளிர்காய வைக்கப்பார்க்கிறார்கள். உங்களுக்கு கல்வி இன்றியமையாததே ஒழிய அரசியல் தலையீடுகளைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம். அரசியல் பயிற்சிபெற உங்களுக்கு சிலநாட்கள் செல்ல வேண்டும். சென்ற சட்டமறுப்பின்போது கலாசாலையைவிட்டு வெளியேறிய உங்கள் தோழர்களில் பலர் நிலை என்னவாயிற்று. எதனையும் முன்பின் ஆராய்வதே நல்லது என்பது உங்களுக்கே தெரியும். ஏமாறாதீர்கள், ஏமாறாதீர்கள்.

அன்பர்களே! உலகம் போர்க்கொந்தளிப்பில் அகப்பட்டுத் தவிக்கும்பொழுது நாம் மட்டும் தனித்திருக்க முடியாது. தற்காப்புக்காக தேசிய முன்னணியில சேரவேண்டும். உடல் உறுதியை உதவ வேண்டும். உள்ள உறுதியுடன் இடம் விட்டுப் பெயர்தல் கூடாது. பொய்ப் பிரசாரங்களை நம்பி மோசம் போனவர்கள், வியாபாரத்தை விட்டவர்கள் எத்தனை பேர். தொழிலைத்துறந்து ஓடியவர்கள் எத்தனை பேர். அப்படி நீங்களும் பொய் வதந்திகளுக்கு இடம் கொடுத்து எதிரிக்கு பலம் தேடிவிடாதீர்கள். தேவைகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். தேசத்தை பலப்படுத்துங்கள். ஒழுங்கும் நீதியும் என்றும் வெல்லும். இது உறுதி.

## ஜெர்மனி, ஜப்பானில்
### காந்தி வாழமுடியுமா!

### ஈஜிப்ட் மெயில் கண்டனம்

கெயிரோவிலிருந்து வெளிவரும் ஈஜிப்ட் மெயில் பத்திரிகை, சட்ட மறுப்பு இயக்கத்தைக் கண்டித்து எழுதிவிட்டு, ஜெர்மனியிலோ. ஜப்பானிலோ, சர்க்காருக்குச் சங்கடம் விளைவிக்கும் ஒரு காந்தியாரை வாழவிட்டிருப்பார்களா? என்று கேட்டிருக்கிறது.

### காந்தியாரின் உயிர் ஜாக்ரதை
### மாளவ்யா வேண்டுகோள்.

பண்டிதர் மாளவ்யா, நாட்டிலே இன்று நடைபெறும் கலகங்களைக் கண்டித்து ஒருஅறிக்கை வெளியிட்டிருக்கிறார். பலாத்காரச்செயல்கள் தலைவிரித்தாடுமானால் என்னை உயிரோடு காணமுடியாது என்று காந்தியார் கூறியிருப்பதைக் கவனியுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

தொடர் கதை

# கலிங்கராணி

[ சௌமியன். ]

முன்பு:—குலோத்துங்க சோழனின் குதிரைப்படைத் தலைவன் வீரமணி, அரண்மனைத் தோழி நடனராணியைக் காதலிக்கிறான். கலிங்கத்தின் மீது போர் தொடுக்கும் சமயத்தில், வீரமணிக்குப் பதவி உயருகிறது. அரண்மனையிலிருந்த ஆரியப்பெண் கங்கா பாலா, நடனராணி மீது பழி சுமத்துகிறாள். அரசிளங்குமரி அதனை நம்பவில்லை. கங்காவை அரண்மனையை விட்டுத்துரத்தி விடுகிறாள். பிறகு.....................

கலிங்க நாட்டிலே கலக்கம் உண்டாகி விட்டது; போர் தொடுக்கச் சோழன் கிளம்பினான் என்ற செய்தி கேட்டதும். ஒற்றரும் ஓடோடிவந்து, நடந்த வரலாற்றினைக் கூறி விட்டனர். தூதுவரும் போர் தொடுத்தாகிவிட்டதென்று ஓலை கொண்டுவந்து கொடுத்து விட்டனர். தமது மன்னன், வீணைவிரோதத்தை வளர்த்துக் கொண்டதால், நாட்டிலே வேதனையே தாண்டவமாடப் போகிறதென்றுணர்ந்த மக்கள், கைபிசைந்து கொண்டனர், கண்களிலே மிரட்சி ஏற்பட்டு விட்டது. போருக்குச் சித்தமாகப் படைபல இருந்தன; காட்டரண், கடலரண், மலையரண் ஆகியவைகளும் இருந்தன. ஆனால் மக்களின் மனஅரண் இல்லை! மன்னனின் மமதை எனும் அரண் கிடந்தது. மதிகேடர்கள் கட்டிக்கொடுத்த மனக்கோட்டையிலே உலவிக்கொண்டிருந்தான் மன்னன். குலோத்துங்கனுக்கு, உள் நாட்டிலேயே எதிர்ப்பு என்றும், பழய மன்னரின் மகன் கட்சி ஒன்று இரகசியமாக வேலை செய்து வருவதாகவும், அதனால், குலோத்துங்கனிடம் குடிபடைகளுக்கு வெறுப்பு வளர்ந்திருப்பதாகவும், வெளிநாட்டின் மீது போர் தொடுக்கவோ, தொடுத்தாலும் வெற்றி பெறவோ, முடியாத நிலைமையிலே சோழமன்னன் இருப்பதாகவும், சோழ மண்டலத்து ஆரியர்கள் கூறினர், கலிங்க நாட்டு ஆரியர் மன்னனிடம் கூறினர். மந்தமதியினான் அதனை நம்பினான், வம்பை வரவேற்றான். போருக்குத்தானும் தயார் என்று பதில் ஓலை விடுத்தான், போரிட ஆயுத்தமானான், சபைகூட்டினான். "மந்திரிமார்களே! பிரதானியரே! படைத்தலைவர்களே! குலோத்துங்கன், இந்தக் குவலயமே தனக்குச் சொந்தமெனக் கூறுகிறான். பிறர் மீது பகைகொண்டு போரிடத் துணிகிறான். சோழன் சூரன், நாம் கோழைகளல்ல! அவன் வீரன். ஆனால் நாம் மண் பொம்மைகளல்ல! அவனிடம் படைகள் உள்ளனவாம், ஆனால் நம்மிடம் உள்ளவை பதுமைகள் என்றெண்ணுவதோ! கரியும் பரியும் அதிகமாம், அதற்காக கர்வமும் பேதமையும் மிகுவதோ! கலிங்கத்தின் மீது குலோத்துங்கன் போர் தொடுத்துவிட்டான். நான் களம்புகச்சித்தமாகி விட்டேன். உம்மைக் கலந்தாலோசிக்கவே இன்று சபை கூட்டினேன்" என்று அனந்த வன்மன் கோபக்கனல் எழப்பேசி, தன் மீசையை முறுக்கினான். சபையிலே நிசப்தமாக இருந்தது. முதியவரான எங்கராயன் எனும் மந்திரியார் எழுந்து நின்று, "மன்னவா! விந்தையான பேச்சு நிகழ்த்தினீர். எம்மைக் கலந்தாலோசிக்கச் சபை கூட்டினீர் என்றீர் ஆனால் களம்புகமுடிவு செய்து விட்டேனென்கிறீர். முடிவு கட்டிய பிறகு கலந்தாலோசித்தல் முறையோ? எதற்கு அது? என்ன பயன்? முடிவு செய்யும் அதிகாரம் முடிதரித்தஉமக்குண்டு. ஆனால் கோடிக்கணக்கான மக்களுடைய வாழ்வைத் தாங்கள் பிடிசாம்பலாகக் கருதினீர். எனவே தான் போரிட முடிவுசெய்து விட்டீர். பொதுமக்க விடை ஏதேனும் புகல இன்று சபை கூட்டுகிறீர் நன்று, நன்று உமது நியாயம்" என்றுரைத்தார். மன்னன், "ஓய்! மந்திரியாரே! வயோதிகம் உமது உடலை மட்டுமே வளைத்து விட்டதென்று எண்ணினேன். உமது மதியும் வளைந்து விட்டதென்று விளக்குகிறீர். சோழனின் சொல்லம்பு என்னைத் துளைத்தது, இனி போர் எனும் கவசம் பூண்டாலொழிய நான் வாழ்வதெங்ஙனம். அவன் போர் என்றதும் நான் பொறு என்பதா? அவன் 'வாள்' என்றதும், நான் "கேள் தேவனே!" என்று முறையிட்டு, மண்டியிடவா? என்னை நீர் மன்னனெனக் கருதாதது ராஜத்துவேஷம், அதை நான் மன்னிப்பேன். என்னைப் போரிடக்கூடாது என்றுரைப்பது, என்னை மானமற்றவனெனக் கூறுவதாகும். அது என் ஆண்மையைப் பழிக்குங் குற்றமாகும். அதை நான் மன்னிக்கமாட்டேன். உமது உயிர் தித்திப்பானால், வீட்டிலே இரும், வெள்ளாட்டியருடன் விளையாடும், வீரர் ஒருவரிருவர் உடன் வாட்டும், களம் புகுவேன் நான்" என்று மன்னன் கடிந்துரைக்கவே, மந்திரி, சோகித்து, "அரசே! ஆத்திரத்திற்குச் சாத்திரமில்லை. பிஞ்சில் பழுத்தது வெம்பிற்று என்பர். வீரம்வேறு வீம்புவேறு. அரசு எனும் சகடத்திலுள்ள நுகத்தடியை ஒருபக்கம் மன்னன், மற்றோர் பக்கம் மந்திரிகள் தாங்கி இழுத்தல் வேண்டும் என்று ஆன்றோர் கூறுவர். மன்னா! காய்வதிலே கடுகத்தனையும் பயன் காண்பதற்கில்லை. கிழட்டுக்கோழையாக இதோ என்னைத்தாங்கள் கூறிவிட்டீர்கள். பதட்டமிக்க பாலகனே! என்று தங்களை நான் கூறமுடியாது, தாங்கள் மன்னர் என்ற காரணத்தால். ஒன்று கூறுவேன், அரசு எனும் எந்திரத்திற்கு மந்திரிகளே கண்கள், மக்களே தாள்கள், தோழரே தோள்கள், ஒற்றரே செவிகள், என்று மேலோர் கூறுவர்" என்று சாந்தமாகவே கூறினார். "ஆம்! அந்தக் கண்களிலே சில மங்கிவிட்டன. அரசே! போர்புரியச் சித்தமான உமது வீரத்தைச் சபை வரவேற்கிறது, கலிங்கம் வரவேற்கிறது, வீரர் வரவேற்கின்றனர்" என்று கூறிக்கொண்டே **திசைமுகன்** எனும் மந்திரி எழுந்து நின்றான். மலர்ந்த முகத்துடன் மன்னன் அவனை நோக்கி, "சபாஷ்! நன்று! இஃதன்றோ நான் கேட்க விரும்பியது." என்று புகழ்ந்துரைத்தான். "குலோத்துங்கனின் படைகள் பூங்காவுக்குள் புகுவதுபோல், இங்குவந்து சேருமோ! இடையே, பாலாறு, குசைத்தலை, முகரி, கொல்லி, பெண்ணை, வயலாறு, மண்ணாறு, போராறு, கோதாவரி, கம்பை, கோதமை ஆகிய பல நதிகளைக் கடக்கவேண்டும். கலிங்கத்தின் மீது பாயுமுன், அந்தப்படைகள் களைத்துப்போகும். ஆகவே, அவைகளை முறியடித்தல் எளிது என்பேன். மேலும், சோழமண்டலம், சுபிட்சமாக இருக்கிறது என்பதைப்பற்றிப் பெருமையாகப் பேசப்படுகிறது. அரசே! அந்தச் சுபிட்சமே, போர்த்திறனை மாய்த்து விட்டிருக்கும், மங்கச் செய்தாவதிருக்கும். எனவே சோழனின் சூரப்புலிகளுக்கு கலிங்கம் அஞ்சத்தேவையில்லை. அஞ்சுவோருக்கு நாம் வளைகள் பரிசதருவோம்! வாளேந்தும் கரங்களுக்குக் கலிங்கத்தில் பஞ்சமில்லை" என்று **திசைமுகன்** பேசினான். அடுக்குத் தனமான அவனது பேச்சுக்குச் சபையிலேயே பலர் சபாஷ் கூறினர். போர்கூடாது என்று வாதிட்ட, எங்கராயன் எனும் மந்திரியாரின் மதிவழி செல மன்னன் மறுத்துவிட்டான். மதங்கொண்ட யானைபோல், ஆர்ப்பரித்தான். நெருப்புப்பொறி எத்துணைச் சிறிதா

8-ம் பக்கம் பார்க்க.

காஞ்சீபுரம் பண்ட்ஸ் Ltd,
காஞ்சிபுரம்
மாதம் ரூ. 25 சம்பளத்தில், நம்பிக்கையும் செல்வாக்குமுடைய ஏஜண்டுகள் ஒவ்வொரு ஊரிலும் தேவை. மற்ற விவரங்களுக்கு 0—1—6 ஸ்டாம்பு அனுப்பவும்.
K. R. CHARY, B. A., Secretary.

திராவிடநாடு

ஞாயிறு] 30—8—42 [காஞ்சி.

# ஐந்து அரசுகள்!

பெரியார்:—'திராவிடநாடு' தனிஅரசாக அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைபற்றி தங்கள் கருத்து என்ன?

கோதவரிமிஸ்ரா:—நியாயமான கோரிக்கையே! அந்தந்த இனம் தங்களின் தனி ஆட்சி கோருவதிலே தவறு என்ன இருக்கமுடியும்?

பெரியார்:—காங்கிரஸ் தலைவர்கள் மறுப்பதன் நோக்கம் என்ன?

மிஸ்ரா:—அவர்கள் மறுக்காதது எது? எங்கள் கதையைக் கேட்டால், என்ன சொல்வீரோ?

பெரியார்:—என்ன? என்ன?

மிஸ்ரா:—ஏன் கேட்கிறீர்கள் அந்த வயற்றெரிச்சலை. எனக்கும் வார்தாவுக்கும் சண்டை ஏற்பட்ட இரகசியம் என்ன தெரியுமோ? எல்லாம் நீங்கள் கேட்கிறது போல, என் மாகாண மக்களுக்கு நியாயம் வழங்கும்படி கேட்டதுதான்.

பெரியார்:—என்னகேட்டீர்கள்? ஏன் மறுத்தார்கள்?

மிஸ்ரா:—விவரத்தைக் கேளுங்கள். ஒரிசா மாகாணம் ஒரியர்களின் இடம். மிக்க ஏழ்மையான மாகாணம். புதியது. இதற்கென ஏற்பட்டுள்ள எல்லைக் கோடு சரியல்ல. அதனால் பலதொல்லை. எல்லையைத் திருத்தி அமைத்தால், மாகாணத்தின் செல்வநிலை விருத்தி அடையும்.

பெரியார்:—ஒரிசாவுக்குச் சொந்தமாக ஏதேனும் இடம், இன்னமும் ஒரிசாவில் சேர்க்கப்படவில்லையோ?

மிஸ்ரா:—ஆமாம்! ஜெம்ஷெட்பூர் பிரதேசம் இருக்கிறதே, அது பீகாருக்குச் செல்வமாக இருக்கிறது, ஆனால் அது பெருவாரியும் ஒரியாமக்களே உள்ள இடம், ஒரிசாவுக்கே சொந்தம், அதை பீகாரிலே சேர்த்து விட்டனர். அதை ஒரிசாவிலே சேர்க்க காங்கிரஸ் தீர்மானிக்க வேண்டுமென்று கெஞ்சினேன், வார்தா வரந்தர மறுத்துவிட்டது.

பெரியார்:—ஏன்?

மிஸ்ரா:—ஒருக்காலும் ஜெம்ஷெட்பூர் பிரதேசத்தை, பீகாரிலிருந்து பிரிக்கக்கூடாது என்று பாபு ராஜேந்திரபிரசாத் கூறிவிட்டார், வார்தாவிலே. பீகாருக்கு வருமானம்கெட்டுவிடும். அது பிரசாதுக்குப் பிடிக்கவில்லை. பிரசாதுக்குப் பிடிக்காதது காந்தியாருக்குப் பிடிக்கவில்லை. காந்தியாருக்குப் பிடிக்காதது காங்கிரசுக்குப்பிடிக்குமோ! ஆகவே எனக்குவரம்இல்லை!

இதுமட்டுமா? சிட்டகாங் பிரதேசமிருக்கிறதே, அங்கே பெருவாரியான மக்கள் ஒரியாக்கள். ஆகவே அந்த இடமும் ஒரிசாவுடனே தான் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இதைச் செய்யுங்கள் என்று கேட்டேன். இதையும் மறுத்துவிட்டனர்.

பெரியார்:—இதற்கு யார் தடை சொன்னது?

மிஸ்ரா:—சுபாஷ் சந்திரபோஸ் இதைப்பலமாக எதிர்த்தார். சிட்டகாங், வங்காள மாகாணத்திலே இப்போது இருக்கிறது. அதை இழக்கமாட்டேன் என்று கூறிவிட்டார். அப்போது அவர் காந்தியாரின் செல்லப் பிள்ளைகளில் ஒருவராக இருந்தார். ஆகவே எனக்கு "இல்லை" தான் கிடைத்தது!

பெரியார்:—போசுக்கு சிட்டகாங்மீது அவ்வளவு ஆசைபிறக்கக் காரணம் என்ன?

மிஸ்ரா:—காரணமா? வங்காளத்திலே இந்துக்களும், முஸ்லீம்களும், இருக்கும் விதம் தெரியுமே உங்களுக்கு. முஸ்லீம்கள் மெஜாரடி என்றபோதிலும், அதிகமான மெஜாரடியல்ல. 56% முஸ்லீம், 44% இந்து என்ற அளவு இருக்கும். சிட்டகாங், ஒரியாக்கள் வாழும் இடம், இந்துப்பிரதேசம். இதை வங்கத்திலிருந்து பிரித்துவிட்டால், வங்கத்திலே முஸ்லீம்களே மிக மெஜாரடி! பஞ்சாபிலுள்ளது போலாகிவிடும். இந்து ஆதிக்கம் குறையும், எண்ணிக்கையும் குறையும். இது சுபாஷுக்கு இஷ்டமில்லை. சிட்டகாங் போய்விட்டால், வங்காளத்திலே, இந்துக்களின் ஆதிக்கம் ஏற்படவே முடியாது. வங்காளமோ 'வந்தே மாதரம்' பிறந்தஇடம். எனவே வம்புக்கு நிற்கிறது. முஸ்லீமுடன் சச்சரவிடுவதற்காக, இந்து எண்ணிக்கையை அதிகமாகக் காட்ட, சிட்டகாங்கைவிட மறுக்கிறார்கள் வங்க இந்துத்தலைவர்கள்.

பெரியார்:—இப்படியா இருக்கிறது? பிறகு உங்கள் மாகாணத்தின் கதிதான் என்ன?

மிஸ்ரா:—இப்போது பூரி ஜகன்னாதர்தான்! என் கிளர்ச்சி வலுத்து ஒரியர்கள் பெருவாரியாக உள்ள இடம், ஒரிசாவுக்கு என்றதிட்டம் நிறைவேறினால், ஒரிசா மாகாணம் முன்னுக்கு வரமுடியும்.

* * * *

மிகப்பழய, மிகச்சிறிய மாடிவீட்டிலே, இந்தச் சம்பாஷணை நடந்தது, சிலமாதங்களுக்கு முன்பு. நமது ஆசிரியரும் உடனிருந்தார் அன்று. பண்டிட் கோதாவரி மிஸ்ரா, ஒரிசா மாகாண மந்திரியாவதற்கு ஒருவாரத்திற்கு முன்பு நடந்த உரையாடல். அன்று ஒரிசாவின் நிலைமை விளக்கப்பட்டது போலவே, ஒவ்வோர் மாகாணத்திலும், (சிந்து, எல்லைப்புறம் தவிர) இந்தப்பிரிவினைக்கிளர்ச்சி சம்பந்தமாக பல நிபுணர்கள் இங்கும் இந்தக்கதிதான்! என்று முறையிட்டனர்.

பஞ்சாப்! இங்கு மக்கள் பஞ்சாபிகள், ஆனால் சுத்திரக்காரு, வியாபாரம், 'பாம்பே வாலாவிடம்' இருக்கிறது, என்று லாகூரிலே ஒரு பிரபலவியாபாரி கூறினர். அவரும் வெளிமாகாணத்தாரே!

அசாமிலே ஒரு சிமிட்டிக்கம்பெனியின் ஆரம்ப விழா! அதை ஆதரிக்கும்படி வெளியிடப்பட்ட அறிக்கையிலே, கம்பெனியின் விசேஷ குணங்களை விளக்கியிருந்தது. கம்பெனியின் திறமையை விளக்குவதைவிட, அசாமின் நிலைமை நன்குவிளங்கிற்று அந்த அறிக்கை மூலம்! இந்தக் கம்பெனியின் டைரக்டர்கள், மிக்கதிறமைசாலிகள். ஐந்துபேர் வங்காளிகள், இருவர் ஐரோப்பியர், என்று அறிக்கை தெரிவித்தது. அசாமிய நாட்டுக்கம்பெனிக்கு வங்க, ஐரோப்பிய முதலாளிகள்!

பம்பாயில் ஒருபகுதி, மத்திய மாகாணத்திலே சிலஇடங்கள், ஆகியவற்றினைக் கொண்டு விதர்ப்பம் என்ற மாகாணத்தை அமைக்கவேண்டுமென்பது,

கனம். ஆமே அவர்களின் கருத்து. அதற்கான கிளர்ச்சியும் இருந்து வருகிறது.

பீகாரிலே, வெளிமாகாணத்தாரின் ஆதிக்கத்தையும், உயர்ந்த ஜாதிக்காரர் என்போரின் ஆளுகையையும் ஒழித்து பீகாரின் பூர்வகுடிகளுக்கு உரிமை ஏற்படுத்தி, பீகாரிலே அவர்களின் ஆட்சியை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஆதிபாசி இயக்கம் இருக்கிறது. (ஆதிவாசி, பூர்வகுடிகள், என்பதன் மருஉ ஆதிபாசி என்பது.) இதனைப் பக்குவமாக நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

நாட்டிலே இன்றுள்ள உணர்ச்சியை, நாட்டின் பெரியகட்சி என்று பாத்யதை கொண்டாடும் காங்கிரஸ், மறைக்கப் பார்க்கிறது என்றபோதிலும், பிரிவினை, உரிமை, எனும் எண்ணம், எங்கும் தோன்றி விட்டது. 'திராவிடநாடு' தனிநாடாக வேண்டுமென்ற நமது கிளர்ச்சி, இதிலே ஒருபகுதி.

**சர் பிரோஸ்கான் நூன்.** அலிகார் பல்கலைக்கழக மாணவர் கூட்டத்திலே பேசுகையில், இந்தியா,

1. எல்லைப்புறம், பலுசிஸ்தானம் பஞ்சாப்
2. வங்காளம், அசாம்
3. ம. மாகாணம், ஐக்யமாகாணம்
4. பம்பாய்
5. திராவிடநாடு (சென்னை)

என ஐந்து அரசுகளாகப்பிரித்து அமைக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார். வெளிநாட்டுப் படை எடுப்பு ஏற்பட்டால் என்ன செய்வதென்று பேசுவோரின் வாயை அடக்கவும் வழியுண்டென்று கூறியுள்ளார். இந்த ஐந்து அரசுகளும் அனுப்பும் பிரதிநிதிகள் கொண்ட மத்தியசர்க்கார், பாதுகாப்பு, நாணய வாரி முறை ஆகியவற்றை நடத்தி வரலாமென்றும் கூறியிருக்கிறார்.

நியூஜிலாந்து, ஆஸ்திரேலியா, தென் ஆப்ரிக்கா ஆகியவைகள் தனிஅரசுகளாக இருத்தல் சாத்யமாகிறதே இங்கு, ஐந்து அரசுகள் ஏற்படுவதிலே என்ன தவறு இருக்க முடியும் என்றும் கேட்டிருக்கிறார். ஐம்பத்தாறு அரசுகள் இருந்தனவாம், இந்து ஆட்சிக் காலத்திலே. புராண இதிகாசாதிகளும், ஆரம்பகால சரிதைகளும் இதனை வலியுறுத்துகின்றன. ஐம்பத்தாறு அரசுகள் கொண்ட பூபாகத்திலே இன்று சர். நூன் கூறும்விதமான ஐந்து அரசுகளுங்கூட இருக்க இந்துத்தலைவர்கள் சம்மதிக்காதது விந்தைதான்! இதற்குக் காரணம் முன்னாளிலே இருந்த ஐம்பத்தாறு அரசுகளும், ஆரியக்கூடாங்கள்! ஆகவே அந்தநிலை, பாரதமாதாவை வெட்டுவதாகத் தோன்றவில்லை. இப்போது தனி அரசுகள் ஏற்பட்டால், ஆரிய ஆதிக்கம் அழிந்தொழியும். எனவேதான், இன்று, தனி அரசுகள் அமையக்கூடாதென்று ஆர்ப்பரிக்கின்றனர்.

எவ்வளவு கடுமையான கூக்குரலைக்கிளப்பினாலுஞ் சரியே, இந்தப்பிரிவினைக் கிளர்ச்சி அடங்காது. வேரூன்றி விட்டது. முறைகள், திட்டங்கள், பலப்பல வெளியிடப் படக்கூடும். சர். நூன் கூறும் மத்திய சர்க்கார் என்பதை, இந்திய தேசநாடுகளின் கூட்டு பாதுகாப்புக் கழகம் என்ற அளவிலே மட்டுமே நாம் ஏற்றுக்கொள்கிறோம். திட்டங்களிலே பலவிதம் விவாதிக்கப்படுவது சகஜமே. ஆனால் அடிப்படையான கோட்பாடு இனிமாய்க்க முடியாததாகி விட்டதைக் காங்கிரஸ் உணரமறுப்பது ஏனோ! யார் மறுத்தாலும் இந்தக் கிளர்ச்சி அடங்கிவிடப் போவதில்லை. அறிவாளிகள், இந்தக் கிளர்ச்சிபற்றி அலட்சியமாக இருந்துவிடவும் முடியாது. "பாகிஸ்தான் பிரிட்டிஷாரால் தரவும்முடியாது முஸ்லீம்கள் அடையவும் முடியாது" என்று முப்புரிதரித்த முதியோர் ராமஸ்வாமி சாஸ்திரியார் கூறுகிறார். காலப்போக்கையும் கருத்து வளர்ச்சியையும் உணர மறுக்கும் உன்னதமான உரிமையை அவர் பெற்றிருக்கிறார் போலும்! பலபல ஆண்டுகளுக்கு முன்பு "எதிரி எப்படி வருவான் எடுத்துவீசு துளசியை எங்கும்" என்று கூறினாராமே தஞ்சை மன்னனுக்கு ஒரு கனபாடி, அந்த வாழையடிவாழையாக வந்த திவான்பகதூருக்கு இத்தகைய உரிமை நிச்சயம் உண்டு! கிடக்கட்டும், இத்தகைய விழியிருந்தும் வழிதெரியாத வித்தகர்கள் ஒருபுறம்!

சர். நூன் போன்றாருக்கு நாம் நமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். வைசிராய் நிர்வாகசபை மெம்பரும், இஸ்லாமிய உலகின் மணிகளில் ஒருவரும், சிலமாதங்களுக்கு முன்புவரை இலண்டனிலே உயர்பதவியிலிருந்தவருமான சர். நூன், உலகநிலை, மக்கள் மனநிலை, சர்க்காரின் போக்கு ஆகிய வற்றினை நன்கு உணர்ந்தவர். எனவே, அவர், 'திராவிடநாடு' தனிநாடாக அமைதல் வேண்டும் என்று குறிப்பிட்டது, மகிழ்ச்சிக்குரியது. இத்தகைய அறிவாளிகளின் உள்ளத்தை வென்ற திட்டங்கள் வெற்றிபெறுவது உறுதி என்று கூறவும் வேண்டுமோ!

டாக்டர் அம்பேத்கார் சென்றவாரத்திலே தமது சொற்பொழிவிலே எடுத்துக்காட்டியுள்ளபடி, நமது கிளர்ச்சிக்குரல், வெளிநாடுகளிலும் கேட்குமாறு செய்யவேண்டும். எந்தத் திட்டம் வந்தாலும், எத்தனை அரசுகள் அமைக்கப்பட்டாலும், இயற்கை, சரிதம், இனப்பண்பு, இலக்கியம், இன்றையநிலைமை முதலிய எந்த ஆதாரத்தைக்கொண்டு அரசுகள் அமைப்பதானாலும், நர்மதை ஆற்றங்கரையிலிருந்து கன்னியாகுமரி வரையிலே, 'திராவிடநாடு' அமைக்கவேண்டும் என்பதே நமது கோரிக்கை.

## குளிர்ந்த காற்று!

வசந்தம் வீழ்கிறது, மாரி மலர்கிறது! இடியும் மின்னலும், மழையும் புயலும்தரும் மாரிக்காலத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். காதலை மாதரைப் புகழ்ந்துரைக்கும் கவிவாணரின் கருத்துக் கிசைந்த வசந்தகாலத்தைப் 'போ' என்கிறோம். ஈதென்ன புதுமை என்று கேட்பர். புதுமையன்று. வசந்தம், வாட்டத்தைத் தரும் செய்திகளையே நமக்குத்தந்தது, மாரி, மனமகிழ்ச்சி பிறக்கும் செய்திகளைக் கூறிற்று. கடந்த வசந்தத்தின்போது வஞ்சகநாஜிகள் மாஸ்கோ வரை பாய்ந்தனர், மருண்டோம், மனங்குழம்பினோம். மாரி பிறந்தது, இடியோடு இடியாகக் கிளம்பிற்று சோவியத் படைஒலி, புயல்போல் புறப்பட்டது செஞ்சேனை, மழைகண்டு மிரண்டோடும் மாதுபோல் ஓடிற்று நாஜிக்கும்பல், மாரிக்காலம் மனதிற்குகந்தான 'ரஷிய வெற்றிகளை'த் தரக் கண்டோம், களித்தோம். இந்த வசந்தமோ, செபாஸ்டபூல், ரஸ்டாவ் வீழ்ச்சி, காகசசுக்குள் நுழைவு, மெய்காப் அழிவு என்ற செய்திகளையும், டோப்ருக் வீழ்ச்சியையும், மலாய், பர்மா எதிரிவசமானதையும், சீனாவில் சித்திரவதையையும், செய்திகளாகத் தந்தன, சோகித்தோம். எனவே வசந்தமே போ! மாரியேவா! என்றழைக்கிறோம். மாரிவரும் பின்னே, மனமகிழ்ச்சிவரும் முன்னே என்ற புதுமொழி போன்று ரஷியாவிலிருந்து செய்தி வெளிவந்திருக்கிறது. மத்தியப் போர்முனையிலே, கடந்த 15 நாட்களாக நடந்துவந்த கடும் போரிலே ரஷியர்கள் முக்கியமானதோர் வெற்றியைப் பெற்றனராம். நாஜிப்படைகள் பல நாசமாயினவாம். 32மைல் பின்வாங்கி ஓடினவாம், பிடித்த பிரதேசத்தை இழந்தனவாம்! 610இடங்களுக்குமேல் நாஜிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டனவாம்! ரிஜாவ் கோட்டையை நோக்கி, சோவியத் படைகள் பாய்கின்றன. ரிஜாவுக்குக் கிழக்கே பத்தாவது மைலில்உள்ள ஜூப்ஸ்ட்ராவ் நகரத்தை ரஷியப்படை பிடித்து விட்டது.

ஸ்டாலின்கிராட் நாஜிகளின் தீவிரமான தாக்குதலில் இருக்கிறதென்பது உண்மையே! ஜெர்மன் டாங்கிப்படை டான் நதியைக் கடந்து மிக மூர்க்கமாகப் போரை நடத்துகிறது. ஸ்டாலின் கிராட், ரஷிய ராணுவ ஜீவநாடி. பெரிய டாங்கித் தொழிற்சாலை உள்ள இடம். ரஷியாவின் முக்கியமான பாதைக்குக் காவற்கூடம். பெயர், பொருளழகுவாய்ந்தது. அதற்கு ஆபத்து அதிகரிக்கிறது. என்பது மனதை மருட்டித்தான் செய்கிறது. பல்லாயிரக் கணக்கானபடையினர் மட்டுமல்ல, ஸ்டாலின் கிராடிலே உள்ள தொழிலாளர்கள் பல ஆயிரவர், சமரிடத் தயாராகி விட்டனர். ஸ்டாலின் கிராடுக்கு அருகாமையிலுள்ள குக்கிராமங்கள் காலிசெய்யப்பட்டு அங்கெல்லாம் வீதிக்கு வீதி களமாக்கிப் போரிட ரஷியர் உறுதிகொண்டுள்ளனர். இதைப் போலவே வட காகசசில் கோர்ஜினிப் எண்ணெ பிரதேசத்திலே மோப்பம் வைத்து நாஜிகள் பாய்கின்றனர். அங்கு, குன்றுகளிலே, மலைச்சரிவுகளிலே வழிநெடுக வீரர்கள் உள்ளனர். மண்ணில் குருதி கொட்டி மாற்றானைத் தடுக்க காசாக்வீரர்கள் குதிரை மீதேறிக் காவல் புரிகின்றனர். கடந்த ஜெர்மன் சண்டையிலே கோரமான கட்டம், வெர்டூன் போர் என்பர் அதற்குச் சமாகக் கூறப்படுகிறது ஸ்டாலின் கிராடுக்காக நடக்கும் போர். இங்குள்ள நிலைமைகண்டு நொந்திடும் நமக்குக் குளிர்ச்சிதரும் செய்தியை மத்தியப் போர்முனை தந்திருக்கிறது. இராணுவ நிபுணர்கள், இதனை, மாரிக்கால ஆரம்பத்தைக் கருதி ரஷியர்நடத்தும் எதிர்த்தாக்குதலின் முதல் கட்டம் என்று கூறுகின்றனர். இதைத் தொடர்ந்து மாரிமுழுவதும், வெற்றிமேல் வெற்றிபெறும் போரை ரஷியப் படைகள் நடத்தும் என்று தெரிவிக்கின்றனர். செப்டம்பர் பிறந்தது. செஞ்சேனையின் வெற்றியும் பிறந்தது என்ற செய்தியைக் கேட்க உலகப் பாட்டாளி மக்கள் துடிக்கின்றனர். மாரிக்காலம் இந்த மகிழ்ச்சியைப் பெய்யவேண்டும்! சீனாவிலிருந்தும், சிந்தைக்கினிய செய்திகள் கிடைக்கின்றன. வீரச்சியாங்கின் படைகள் சேக்கியாங் மாகாணத்திலிருந்து ஜப்பானியரைவிரட்டி அடிக்கின்றனர். அமெரிக்கக் கடற்படை சாலமண் தீவுகளில் உள்ள ஜப்பானிய தளங்களை தாக்கிப்பிடித்து எதிர்த்த ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்தன. பிரன்சுக் கரையோரத்திலே பிரிட்டிஷ் படை டாங்கிகளுடன் இறங்கி ஜெர்மன் படைகளின் நாடியைப் பிடித்துப் பார்த்தன. பிரிட்டிஷ் அமெரிக்க விமானப் படையோ, விடாது ஜெர்மனியைத் தாக்குகின்றன. ஆப்பிரிக்காவிலோ ரோமலின் படைகள் அகின்லெக் அரணைக்கண்டு அடங்கி விட்டன. பெர்லின்மீது வட்டமிட்டன ரஷிய விமானங்கள் கடந்த புதனன்று, ஜெர்மன் ரேடியோவே இதைக் கூறிவிட்டது. மாரிபிறக்கும் முன்னம் நமது மனதுக்கு ரம்மியமான இந்தக் குளிர்ந்த காற்று வீசிடக் காண்கிறோம். மாரியே வருக! மாற்றாரை மருட்டுக! நேசநாடுகளுக்கு வெற்றி பொழிக!!

---

கலிங்க ராணி! 5-ம் பக்கத்தொடர்ச்சி.

யினும் அது தங்க இடங்கிடைத்துவிட்டால், தங்குமிடத்தை அழித்தொழுக்கும் வகைபோல், கலிங்க மன்னனின் கெடுமதி எனும் சிறு தீப்பொறி தங்க இடமளித்ததால், கலிங்கமே அழியும் நிலையைப் பெறவேண்டியதாயிற்று.

“குலோத்துங்க மன்னனுக்கு நான் எளியவனாக இருக்கலாம், திசைமுகா! அவன் ஏவும் படைகளுக்குமா எளியனானேன்” என்று கலிங்க மன்னன் கடுப்புடன் கேட்டான். “மன்னவ! மாற்றாருக்கு நமது வலிமையைக் காட்டச் சந்தர்ப்பமின்றி வாடினேன். வெற்றி மாலையைத் தங்கட்கு விரைவில் தருவேன். ஏன்? சோழனின் சுந்தரகுமாரி, அம்மங்கையின் கரத்தையும் தர இயலும். ச்சாகம், விடுக! உறுதியுடன் நமது படைகள் போரிடும். புதுப்புது ஆயுதங்கள் குவித்துள்ளேன். ஆயுத ஒளியே, சோழனின் படை வீரரின் கண்களைக் கூசவைக்கும்” என்று தைரியம் கூறினான் திசைமுகன். சாந்தம் போதித்த எங்கராயன், “ஏனப்பா திசை முகா! நீ புது ஆயுதங்களைப் பற்றிப் பூரிப்புடன் பேசுகிறாய். உன் பேதமையை என்னென்பேன்! சோழ நாட்டிலே படைக்கலங்கள், மிகப்பழயன! புதியன வன்று! ஒளி இழந்தன, வளைந்தன, இன்று அவைகளை உலைக் கூடங்களிலே காய்ச்சியும் தட்டியும், நீட்டியும் மடக்கியும்சரி செய்து கொண்டிருப்பார்கள். புதுப்படைக் கலன்கள் உன்னிடம், போரறியாக் காரணத்தால். பழய ஆயுதம் அங்கு, போரிட்டுப் போரிட்டுப் பழகியதால்! உன் ஆயுதம் ஒளி உள்ளன, உறையிட்டுக் கிடந்ததால். அவர்களின் ஆயுதங்கள், எதிரியின் உடலைக் கீறி, இரத்தத்தில் இறங்கி, கரியைத் துண்டித்து பரியைச் சிதைத்து, ஒளி இழந்தும், வளைந்தும் போயினவை. பளபளப்பான ஆயுத முள்ளவனே! வளைந்த ஆயுதக்காரன், வலிமை மிக்கான், போரிலே புரண்டெழுந்தவன் என்பதையன்றோ, அவனது படைக்கலங்கள் காட்டுகின்றன. உனக்கு ஆயுதம் பளபளப்பு! குலோத்துங்கனுக்கோ, கீர்த்தி ஒளி விட்டு வீசுகிறது! வீரன், உடலில் பலவடுக்கள் உள்ளன! வீம்புக்காரனுக்கு வடு இராது, முன்னவன் போர்க்களம் புகுந்தவன் என்பதன் அத்தாட்சி அந்த வடுக்கள், பின்னவன் போகப் புரட்டன் என்பதற்கு அத்தாட்சி, வடுவற்ற வடிவமாக அவனிருத்தல். கலிங்கத்தின் நிலைமை, உன் கர்வமெனும் அளவுகோல் கொண்டு அளக்கிறாய்” என்று கண்டித்தார். மன்னன் வெகுண்டு, “நீர், கலிங்க நாட்டு மந்திரியா, சோழனின் ஒற்றரா?” என்று கேட்டுக் கொதித்தான். ஆனால் அந்தச் சமயத்தில், அவன் சிந்தையை மருட்டிடும் சம்பவம் நடந்தது. ஓடோடிவந்த வேலையாள் ஒருவன், “அரசே! வீரமணி என்ற குதிரைப்படைத் தலைவன், நதிகளைக் கடந்து விட்டான். கலிங்கத்தின் எல்லையிலே அவனது குதிரைப்படை புகுந்துவிட்டன” என்ற செய்தியைக் கூறினான். மன்னன், திசைமுகனைப்பார்த்தான், திசைமுகன் திக்கெட்டும் மாறி மாறி நோக்கியபடி நின்றான். (தொடரும்)

---

## பிறைக்கொடி பிரதேசத்தில்

**துருக்கி,**

ஐரோப்பாவின் அமளியிலே கலவாமல் ஒதுங்கி உள்ள துருக்கி, எந்த நிலைமையைச் சமாளிக்கவும் தயாராக இருப்பதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

**ஈராக் ஈரான்,**

இவ்விரு நாடுகளுக்கும் சேர்த்து கூட்டுப்படைத் தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார். காகசசைக் குடைந்து கொண்டு ஜெர்மன் படைகள் வருமானால், இந்த இரு நாட்டுப் படைகளும், நாஜிசத்தைஎதிர்க்கத்தக்க முஸ்தீப்புடன் உள்ளன. மிஸ்டர் சர்ச்சில், இங்கு விஜயம் செய்தது மிக்க உற்சாக மூட்டியிருக்கிறது.

**ஈஜிப்ட்,**

மிஸ்டர் சர்ச்சில் இங்கு வந்தது, படைகளிடையேயும், பொதுமக்களிடையேயும் மிக்க உற்சாக மூட்டி யிருக்கிறது. ஈஜிப்ட் மன்னர் பரூக் சர்ச்சிலுக்குப் பிரியமான சுருட்டு பரிசளித்தாராம்.

**ஆப்கன்,**

சின்னாட்களுக்கு முன்பு ஆப்கன் நாட்டு சுதந்திர விழா பற்றி மன்னர் ஜாகீர்ஷா சொற்பொழி வாற்றினார். ஆப்கன் நாடு நடு நிலைமை வகிப்பது பற்றி விளக்க முரைத்தார். பவனியும், தர்பாரும், விசேஷ விமரிசையுடன் நடைபெற்றது.

2ம் பக்கத் தொடர்ச்சி. சூரியக்குட்டியை தேடிய

மான கட்டும் பருவமும் கொண்ட கூட்டம் எவ்வளவு! அந்தப்பருவத்தினரிலே எருதுகள் மோதிக்கொள்ள இடையே நின்று இரத்தம் பருகிடுமே நரி, அந்த சைய "நற்குண" நாயகங்கள் எவ்வளவு, கனி மேலே வீழ்ந்தாலும் கிலிகொண்டு கடுகி ஓடும் முயல் போன்ற வீரசிகாமணிகள் தொகை எவ்வளவு, சுற்று முற்றும் பார்த்து நகரும் ஆமை இயல் பினர் எவ்வளவு, இந்தக் கழிவுபோக, மீதமுள்ளவர்கள் எவ்வளவு, அவர்களிலே படை புகும் திறம், தீரம்கொண்டோர் எவ்வளவுபேர் கிடைப்பர், கிடைத்து பயிற்சி தருவதற்கு எத்தனைகாலமாகும், தந்து தக்கபடைக் கலந்தேடிட எவ்வளவு காலம் பிடிக்கும், இவ்வளவும் நடந்தாலன்றோ, "வெள்ளையனே! நீபோ உன் தீவைப்பாதுகாக்க, இந்தப் "புண்ணிய பூமியை" க்காப்பாற்ற நாங்கள் இருக்கிறோம்" என்று நாம் உரைக்கமுடியும். அது இன்று இல்லை. நாளைக்குக் காந்திராஜ்யம் ஏற்பட்டுவிட்டால், மறுதினம், மறுமாதம், மறு ஆண்டு இந்நிலை ஏற்படும் என்றுரைக்க விவேகிகள் முன்வாரார்! அதுவும் முடியுமெனில், அதுவரை நாங்கள் படை எடுக்கப் போவதில்லை" என்று ஜப்பான் கூறுது.

போர்ப்பழக்கம் கொண்ட சீனு, பிரிட்டிஷ், அமெரிக்கப்படை பலத்தை "இ ர வ ல்" கேட்கிறது, போரையே 150 ஆண்டுகளாகக் கண்டறியாத நாம், போர் வரின், பூசுரின் யாகயோகாதிகள் நாட்டைக் காத்திடும் என்ற நயவஞ்சகத்தை நம்பி மோசம் போனவர்களின் வழி வந்த நாம், அருகிலே, ஜப்பான் சீற, காகசஸைக் குடைந்து கொண்டு பாய்வேன் என்று ஜெர்மனி மிரட்ட, கலங்கிடும் இந்த நேரத்திலே, இந்தப் படை எடுப்பைத் தடுக்கும் போர் நடத்தக் கடமைப்பட்ட, பக்குவப்பட்ட, பலம்படைத்த பிரிட்டனிடம், பகை மூட்டவும், இதுதான் சுயராஜ்யம் கேட்க தக்கசமயம், என்றுகூறவும், கலகங்களைக்கிளப்பிவிட்டு, இது புரட்சி என்று கூறவும் முற்பட்டால், இதனைக்கண்டு, நான்என்ன எண்ணுவது தோழர்களே! இது வாபுரட்சி!.

தேடுகிறார்களே தோழர்கள், எங்கே வெள்ளையன் ஆதிக்கம் இருக்கிறது என்று, தண்டவாளத்தைப் புரட்டி அதனடியிலே இருக்கிறதா என்று பார்க்கிறார்கள், தபாலாபீசைக் கொளுத்தி, அங்கேயும் காணோமே என்று தவிக்கிறார்கள், ஓடும் இரயிலைப் பார்த்து பிடி, விடாதே என்று கூவுகிறார்கள், இங்கெல்லாமா வெள்ளைக்காரன் இருக்கிறான்! இவைகளா, நாட்டு விடுதலைக்கு வழிகள்! மன்னார் குடி நகர சபைக்கட்டிடத்திலே, எந்த வெள்ளைக்காரன் இருந்தான், எந்த வெள்ளையராதிக்கம் இருந்தது. அதை நாசஞ் செய்ததால், இலண்டனிலே ஒரு சொட்டு கண்ணீர் விடப்போகிறார்களா, ஒரு சல்லி நஷ்டமா வெள்ளையருக்கு. இதோ, கூட்டு அபராதமாமே, "கொளுத்து, ஆனால் பணத்தைக்கட்டு" என்று சர்க்கார் கூறுகிறதே. யாருக்கு சுயராஜ்யம் தேடுகிறார்கள் இந்தத் தோழர்கள்!

ஒரு நாட்டின் ஆட்சி மற்றோர் நாட்டினிடம் இருக்குமானல், அடிமைப்பட்ட நாடு புரட்சி செய்து சுயராஜ்யம் பெறமுடியாது. புரட்சி செய்வதன் மூலம் அடிமை கொண்ட நாட்டின் அடக்கு முறைகளுக்கு வரவேற்பு அளிக்கின்றனர், விடுதலை வழங்கப்படும் காலத்தையும் மனதையும் கெடுத்து விடுகின்றனர். ஒருநாடு மற்றோர் நாட்டின் பிடியிலிருந்து தப்பிட, சிக்கிக்கொண்ட நாடு ஓரேமக்கள், வேற்றுமையிலும் ஒற்றுமை காண்போம், பன்மையிலும் ஒருமை காண்போம், கசப்பிலும் இனிப்பு காண்போம், என்று பேசிடும் சமுதாயமல்ல, பேதமற்ற, பிளவற்ற ஒருமனப்பட்ட சமுதாயங்கொண்டதாக மாறவேண்டும். அதுதான் சுயராஜ்யத்துக்கு வழி! மற்றவை அல்ல! அந்த நிலைமையை உண்டாக்குவதையே நான் புரட்சி என்பேன். மற்றவை வீண் மிரட்சியை உண்டாக்கச்செய்யப்படுபவை! இன்று நடைபெறுவதை புரட்சி என்று கருதுவோர், புரட்சிச் சம்பவங்களையும், சமயங்களையும், நோக்கங்களையும், தெரியாது விளக்கைச்சூரியக்குட்டி என்று கருதி வீட்டை நாசஞ் செய்தவருக்கொப்பானவரே யாகும்! இன்று வரை நடைபெற்றுள்ள சம்பவங்கள், இம்மியளவும், பிரிட்டிஷாரை பாதித்தது, நஷ்டத்திற்குள்ளாக்கியது என்று கூறமுடியுமா! நஷ்டம், கஷ்டம், இங்குள்ள நம்மவருக்குத்தான்! இவ்வளவும், சுயராஜ்யமோ, சுகராஜ்யமோ ஏற்பட வழிசெய்வதாகாது, குழப்பம் அதிகரித்து எதிரி உள்ளேபுக வ ச தி தே டு வ தா க த் தான் முடியும்! ஜப்பான் ராஜ்யம் ஏற்படஉழைக்கும் எவரையும், விடுதலை வீரர்கள் என்று கொள்வதற்கில்லை. அந்தநோக்கத்துடன் நடத்தப்படும் செயல்களை, புரட்சி எனக்கூறமுடியாது. இன்று இதனை நடத்தும் தோழர்கள், எங்கள் நோக்கம் அதுவல்ல என்றுரைக்கக்கூடும். நோக்கம் அதுவாக இல்லையேல், சந்தோஷம் தோழரே, ஆனால், விளைவு என்னவாக இருக்க முடியும் என்பதை எண்ணிப்பார் என்று கூறுகிறேன். நான் பார்த்தேன், எங்களூர் சுவற்றிலே, "இந்தப்புரட்சி" க்கோஷ்டியின் எழுத்தோவியம் ஒன்றை. "1942 செப்டம்பருக்குள் ஜப்பான் படை எடுப்பு, ஆகவே பொது ஜனப்போர் நடத்த இதுவே தக்கசமயம்" என்று எழுதியிருந்தது. நடு நிசியில், கள்ளன் வரப்போகிறான், ஆகவே புறக்கடைக்கதவைத்திறந்து வைக்க இதுவே தக்கசமயம், என்று எழுதியிருந்தால், எவ்வளவு விந்தையாக இருக்குமோ அவ்வளவுவிந்தையாகஇருந்தது அதைப்பார்க்க. என்ன அறியாமை! எவ்வளவு மன மயக்கம்!; சூரியக்குட்டியைத்தேடிய சூரனுக்கும், கட்டுப்பாடானமுயற்சியில் இறங்கி எதிரியிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, பிரிட்டிஷ் அமெரிக்க அரசுகளின் தோழமையைக் கேட்டுப் பெறவேண்டிய நேரத்திலே, அவர்களை எதிர்த்து நான் புரட்சி நடத்துகிறேன் என்று கூறுவதற்கும், வித்தியாசம் இல்லையே!!

கலெக்டர்களாக, கவர்னர்களாக, ஜட்ஜிகளாக, வைசிராய்களாக, வெள்ளையர் இங்கு வந்து தங்கி வாழ்ந்த இத்தனை நாட்களாக வெளியேபோ என்றுரைக்கக்கிளர்ச்சி இல்லை, வெள்ளையர்கள், இன்று சோல்ஜர்களாக, இரத்தத்தைச் சிந்த வந்திருக்கும் வேளையிலே, வெளியேபோ! என்றுகூறுவதா, நாட்டு விடுதலைக் கிளர்ச்சி! வெளியேபோ! என்று வெள்ளையனைக் கூறும் தோழர்கள், புரட்சி வீரர்களல்ல, நாட்டு விடுதலை விரும்பிகளல்ல, வெள்ளையனை வெளியே போகச் சொல்லி விட்டோம், உள்ளேவா! என்று ஜப்பானை அழைக்கும் பேர்வழிகளேயாவர்!

## ஆரியக்கூத்தில் சேராதீர்!
## நாடார் தோழர்களுக்கு வேண்டுகோள்!

(தஞ்சை தோழர் எம். எம். நடராஜன்)

நந்தமிழ் நாட்டினிலே வாழும், நமது நாடார்குல மக்களின் முன்னேற்றத்திற்காகவும் நமது சமூக முன்னேற்றத்திற்காகவும், நமது குலப் பெரியார்களான செளந்தர பாண்டியன், வி. வி. ராமசாமி, போன்றவர்களாலும். நீதிக்கட்சியில் ஆர்வமுள்ள இளைஞர்களாலும் பாடுபட்டு உழைந்துவருவது, நமது சமூக மக்களை ஆதரித்து வரும் செய்தித்தாளின் மூலம் நன்கு தெரிந்த விஷயமேயாகும்.

தேசத்தையே பாழ்படுத்தி வரும் ஆரியக்கூத்தாடிகளின் மாயாஜால சபைதனில், சிற்சில நாடார்கள் அமர்ந்து கொண்டு, நமது குலமக்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய், தடைக்கல்லாய், இடையூறாய் இருந்து வருவது வருந்தத் தக்கதேயாகும்.

நமது குலமக்களாகும் நாடார்கள் ஒவ்வொருவரும் அறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்து. "குலத்தைக் கெடுக்கும் கோடாரிக்காம்புகளை" மதியாமல், நீதிக்கட்சி தனில் சேர்ந்து, தொண்டாற்றி வரவேண்டுமென்றும், பகுத்தறிவுடன் வாழவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

## பொன்னன் பூஞ்சோலைத் திறப்பு விழா
## சக்திவேல் கோஷ்டி இசைவிருந்து

24-8-42 மாலை 6-மணிக்கு ஏராளமான உள்ளூர் பிரமுகர்கள் முன்னிலையில், சின்னகாஞ்சீபுரம் பார்ப்பனரல்லாதார் இளைஞர் கழகத்திலே அமைத்துள்ள பூஞ்சோலைத் திறப்பு விழா, தோழர் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது. தேனீர் விருந்துக்குப்பிறகு, பண்டிட் ஆனந்தம், கண்ணகி பட அமைப்பு முறையைக் கண்டித்து ஒரு தீர்மானம் பிரேரேபித்தார். தோழர் A. K. தங்கவேலர் அதனை ஆதரித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

பிறகு திருவாவடுதுறை, சக்தி வேல் கோஷ்டியின் நாதஸ்வரக் கச்சேரி மூன்றுமணி நேரம் நடைபெற்றது. தோடி, கல்யாணி, காம்போதி, சாவேரி, பூபாலம் மோகன, இராகஆலாபனங்களில், தோழர் சக்திவேல், மிக்கரசத்துடன் தமது இசைத்திறமையைக் காட்டினார். குளிர்ச்சி பொருந்திய நாதம், பிகுவான பிடிகள், பாடாந்தரத்தைக் காட்டும் பிர்க்காக்கள், ஜிலுஜிலுப்பான எடுப்புகள். விளங்கின. பல்லவி வித்வத்துவத்தைக் காட்டுவதாகவும் தோழர் திருவாடுதுறை நாதஸ்வர வித்வான் ராஜரத்தினம் வாசிக்கும் பாவத்தைப் பெரிதும் ஒத்ததாகவும் இருந்தது. தவுல்வாசித்த தோழர் சங்கரன், மிக்க கெம்பீரமான நடைகளைக் காட்டினார். சில்லரைச் சொற்களும், ஜதிகளும், பொறிந்தன. சினிமாப் பாடல்களை ரம்மியமாக வாசித்தனர். கடைசியில் சிந்துபைரவி ஆலாபனத்துடன், ஓலமிட்ட சுரும்பு என்றதமிழ்ப் பாடல் வாசிக்கப்பட்டது. வந்திருந்தோர், தோழர்கள் சக்திவேல், சங்கரன் ஆகியோரைப் பாராட்டினார்கள்.

## திருத்துறைப்பூண்டி
## டி. முன்சீப்பு கோர்ட்டு.

O. P. No $\frac{48}{1942}$

திருத்துறைப்பூண்டி தாலுகா கள்ளிமேடு வட்டம் கோவில் பண்ணை கிராமத்திலிருக்கும் முருகையா நாதசுரக்காரர் சம்சாரம் கோவிந்தம்மாள்— } மனுதாரி

எதிர் மனுதார்—Nil

ஷை மனுதாரி பிளீடர் R. ராமசந்திர அய்யர் தெரிவித்துக் கொள்ளுகிறதாவது

மனுதாரி புருஷன் முருகையா நாதசுரக்காரர் ஸ்திரவாசமாக வசித்துவந்த ஷை கோவில் பண்ணை கிராமத்தில் 28—8—1941ல் intestate ஆக இறந்துவிட்டதாகவும் ஷை யாருக்கு திருத்துறைப்பூண்டி தாலுகா தாமரைப்புலம் சுப்பன் ஆசாரிமகன் காளியப்பத்தரிடமிருந்து 8 8-1936ல் ரூ 50—0—0க்கு ஏற்பட்ட புரோ நோட்டுப்படி ரூ 51-5-8ம் 22-8-1936ல் ரூ50—0—0க்கு ஏற்பட்ட புரோ நோட்டுப்படி ரூபா 64 8—6ம் ஆக ரூ 115—14—2 கிடைக்க வேண்டியிருப்பதாகவும் ஷை யாருக்கு சம்சாரமாகிய மனுதாரியை தவிர வேறுவார்சு கிடையாதென்றும் அதை வசூலிக்க மனுதாரிக்கு Succession Certificate கொடுக்க மனு கொடுத்து 12—9—42 நோட்டீஸ் கெடு குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிராமத்தில் தண்டோராமூலம் பிரசித்தம் செய்யவும் உத்திரவாகி இருக்கிறது. ஆக்ஷேபனையுள்ளவர்கள் அன்று பகல் 10மணிக்கு ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

Ramachandarn,
Pleader for pettioner.


எங்கும் அதிக விற்பனை!

மிதருஸ்,

### எஸ். டி. ஷண்முகம் பட்டணம் பொடி

பவுன்கலர், கருப்புகலர் ஆகிய எல்லா ரகங்களும் நம்மிடமிருக்கின்றன.
உயர்ந்த புகையிலையினால் 30 வருஷ
அனுபவமுள்ள தொழிலாளரைக் கொண்டு தயார் செய்யப்படுகிறது.
விவரங்களுக்கு எழுதுங்கள்,
27-சேஷாத்திரிபாளையம் (சின்ன) காஞ்சிபுரம்.

எஸ். சையத் அஹமத்,
மானேஜர்.

M. சேஷய்யா,
சோல் புரொப்ரைடர்.


சென்னை. பண்டித,
### எஸ். எஸ். ஆனந்தம் அவர்கட்கு
வேலூர்.
### திரு. மு. அண்ணல்தங்கோ எழுதுவது

அன்பே உருவாய ஐய வணக்கம் நலம், நாடுவதும் அதுவே. தங்கள் நிறைந்த அன்புடைக்கு அருளுடைமைக்கு என்றுங்குன்றா நன்றியுடையேன். தாங்கள் எனது நலம் நாடிக்கொடுத்தனுப்பிய "பச்சிலைப் பாது" எனும் மருந்து (ஈளை இருமல் கொல்லிக்குப்பி) கைவரப்பெற்று அதனை உட்கொண்டு வருகின்றேன். இதுகாலை இருமல் இல்லை. நீங்கள் செய்துகாட்டியபடி மூச்சுப்பயிற்சியை(பிராணாயாமம்) காலை,மாலை தவறாது செய்துவருகின்றேன். இது சாலப்பயன் அளிக்கிறது. எனது உடல் சற்று உரமே பெற்றுளது. இங்ஙனம் எனது உடல் நோயை உளநோயை அகற்றி உரமடையச்செய்து உய்யும் வழிகாட்டிய தங்களை எனது தந்தை எனவே கருதியுள்ளேன்.

"தமிழ்நிலம்" என்னும் கிழமைத்தாளைத் தொடங்க முயலுகின்றேன். இதன்வாயிலாக நமது அருமைத்தமிழுக்கும் தமிழ்மக்களுக்கும் சிறந்த தொண்டாற்றுவதே எனது முழுநோக்கம். இதற்கும் தங்களது அன்பும் அருளும் இருத்தல் நனி மிக இன்றியமையாததாகிறது. வணக்கம்,

(ஓம்) மூ. அண்ணல்தங்கோ,

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின் தமிழ் மருத்துவகூடம்
10, ராகவையாவீதி, தியாகராயநகர் சென்னை.

பண்டித ஆனந்தம் அவர்கள் இப்போது உள்ள இடம்,
143, நடுத்தெரு சேக்குப்பேட்டை காஞ்சிபுரம்.

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A. at 51, Nimanthakara Street, L. Conjeeveram.